## ரூ.32.62 கோடியில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட

# ‘விக்டோரியா’ பொது அரங்கம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## ரூ.74,70 கோடியில் பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய மன்றக்கூடம்: முதல்வர் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, டிச.24–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், சென்னையின் கலாச்சாரச் சின்னமான விக்டோரியா பொது அரங்கம் 32.62 கோடி ரூபாய் செலவில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டு திறந்து வைத்தார். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமை அலுவலகமான ரிப்பன் மாளிகை வளாகத்தில் 74 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய மன்றக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.**

### சென்னையின் கலாச்சாரச் சின்னமான விக்டோரியா பொது அரங்கம்

விக்டோரியா பொது அரங்கம், சென்னையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கட்டடமாக திகழ்கின்றது. இக்கட்டடம் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் பேரரசி விக்டோரியாவின் பெயரிடப்பட்ட சிறப்பு வாய்ந்த கட்டடமாகும். மேலும், சென்னை மாநகரின் கட்டடக் கலைக்கு ஒரு எடுத்துக் காட்டாகவும், விக்டோரியா ராணி ஆட்சியின் பொன் விழாவை நினைவு கூறும் வகையிலும் அமைக்கப்பட்டது. ராபர்ட் சிசோல்ம் என்பவரால் இந்தோ சாரசெனிக் கட்டடக்கலையில் 1887-ஆம் ஆண்டு இந்த அரங்கம் கட்டப்பட்டது.

இந்தக் கட்டடம் கட்ட திருவிதாங்கூர் மன்னர், மைசூர் மன்னர், புதுக்கோட்டை மன்னர், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசர் முத்துசாமி, பி.ஆர்.அண்டு சன்ஸ் கடிகார நிறுவனம், இராமநாதபுரம் மன்னர் பாஸ்கரசேதுபதி, எட்டையபுரம் சமீன்தார் உள்ளிட்ட பலர் நன்கொடை வழங்கியுள்ளனர்.

மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர், கோபால கிருஷ்ண கோகலே, சுப்பிரமணிய பாரதியார், சர்தார் வல்லபாய் படேல் போன்ற தேசியத் தலைவர்கள் விக்டோரியா பொது அரங்கிற்கு வருகை தந்து கூட்டங்களை நடத்திய சிறப்பு பெற்றது. சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்ற தமிழ் நாடக முன்னோடிகள் தங்களது நாடகங்களை இங்கு நடத்தியுள்ளனர்.

சென்னையில் முதன் முதலில் திரைப்படம் திரையிடப்பட்டது இங்குதான். மெட்ராஸ் போட்டாகிராபிக் ஸ்டோரின் உரிமையாளரான டி.ஸ்டீவன்சன் என்பவர் பத்து குறும்படங்களைக் கொண்டு சில காட்சிகளை இங்கு திரையிட்டார்.

வரலாற்று சிறப்புமிக்க, தொன்மை வாய்ந்த விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டு, நிதி ஒதுக்கீடு செய்தார். அதனடிப்படையில், சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 32.62 கோடி ரூபாய் செலவில் அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணி 20.03.2023 அன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

இரண்டு தளம் கொண்ட விக்டோரியா பொது அரங்க கட்டடத்தின் நீளம் 48 மீட்டர், அகலம் 24 மீட்டர் ஆகும், பிரதானக் கூரையின் உயரம் 19 மீட்டர் மற்றும் மொத்த கோபுரத்தின் உயரம் 37 மீட்டர் ஆகும். மேலும், இக்கட்டடத்தின் தரைத்தளத்தில் அருங்காட்சியகமும், முதல் தளத்தில் கலாச்சார கலை நிகழ்ச்சி நடைபெறும் இடமாகவும் உள்ளது.

### புனரமைத்து திறந்து வைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தின் சிறப்பம்சங்கள்!

தற்பொழுது இந்த விக்டோரியா பொது அரங்கின் முழுக் கட்டடத்தையும் அதன் தொன்மை மாறாமல் பழுது பார்க்கும் பணிகள், நில அதிர்வினை தாங்கும் வகையில் மறுசீரமைப்பு பணிகள், முழு கூரையினையும் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், வெளிப்புறம் மற்றும் உட்புறம் மரத்தளம் மற்றும் மரப்படிக்கட்டுகளுடன் மறுசீரமைப்பு செய்யும் பணிகள், ஏற்கனவே உள்ள கட்டடத்தை தற்போதைய பயன்பாட்டிற்கு ஏற்றவாறு மேம்படுத்துதல், கலைநயத்துடன் கூடிய முகப்பு விளக்குகள் அமைக்கும் பணி, புல் தரைகள் அமைக்கும் பணி உள்ளிட்ட பல்வேறு மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டுள்ள இவ்வரங்கம், தற்போது அருங்காட்சியகமும் கலை மேடையும் கொண்ட ஒரு பொது பண்பாட்டு தளமாக மாற்றப்பட்டுள்ளது. தொன்மைமாறாமல் புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தை முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திறந்து வைத்தார்.

விக்டோரியா பொது அரங்கத்தின் தரைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியில் - அரங்கம் கட்டுவதற்கு உதவிய ஆதரவாளர்கள், கட்டடக் கலைஞர், ஒப்பந்ததாரர், இங்கு உரையாற்றிய தலைவர்கள், நீதிக்கட்சியின் எழுச்சி, நாடகமும் சினிமாவும், விளையாட்டுகளின் வரலாறு ஆகியவற்றை விரிவாகப் பதிவு செய்கிறது. வெளிப்புறப் பகுதியில் டிராம் வண்டி, தொல்லியல் காட்சிப் பகுதி ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், பக்கிங்காம் கால்வாயில் படகு, பழைய ஸ்கூட்டர், ரிக்‌ஷா போன்ற நினைவூட்டும் செல்ஃபி பாயிண்ட்கள் மூலம் பழைய சென்னை நகரின் நினைவுகள் உயிர்ப்பிக்கப்படுகின்றன.

புனரமைக்கப்பட்ட விக்டோரியா பொது அரங்கத்தில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக் காட்சி, அங்கு வைக்கப்பட்டுள்ள சினிமா புகைப்படக் காட்சி, பயாஸ்கோப் உள்ளிட்டவற்றை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். தொடர்ந்து, முதல்தள கூட்ட அரங்கில் நீதிக்கட்சி வரலாறு குறித்த கலை நிகழ்ச்சியை பார்வையிட்டார்.

பின்னர், முதலமைச்சர் அவர்கள், விக்டோரியா பொது அரங்க இணைய தளத்தை தொடங்கி வைத்து, விக்டோரியா பொது அரங்க இலச்சினையையும் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து, விக்டோரியா பொது அரங்கத்தின் முன்புறப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள பழைய காலத்து ட்ராம்வே மாதிரி வடிவம், பண்டைய கால படகு, கீழடி கண்காட்சி அரங்கு ஆகியவற்றை பார்வையிட்டார்.

### ரிப்பன் மாளிகை வளாகத்தில் புதிதாக கட்டப்படவுள்ள மன்றக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்!

பெருநகர சென்னை மாநகராட்சியின் தலைமை அலுவலகமான ரிப்பன் மாளிகை வளாகத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் 92,000 சதுர அடி பரப்பளவில், 74 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய மன்றக்கூடத்திற்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

சென்னை மாநகரத்தின் 125 ஆண்டுகளுக்கும் மேலான நிர்வாகப் பாரம்பரியத்தை தாங்கி நிற்கும் ரிப்பன் கட்டட வளாகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் புதிய மன்றக்கூடம், 74.70 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மக்கள் பிரதிநிதிகளின் ஜனநாயக உரையாடலுக்காக, நவீன வசதிகளுடன், பாரம்பரிய கட்டடமாக தமிழ் சூழலோடு இணைந்த நவீன கட்டடமாக கட்டப்படவுள்ளது.

இந்த கட்டடத்தில், 300 உறுப்பினர்கள் அமரக்கூடிய விசாலமான மாமன்ற அரங்கம், பொதுமக்கள் பார்வையிட அமைக்கப்பட்டிருக்கும் பார்வையாளர் மாடம், ஊடகங்களுக்கு தனியான மீடியா கேலரி, ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அலுவலகங்கள், மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோருக்கான அலுவலகங்கள், நிலைக்குழுகளுக்கான அலுவலகங்கள் மற்றும் மன்றத் துறை அலுவலகம், கூட்ட அரங்கங்கள், காத்திருப்பு அறைகள், உணவருந்தும் அறை, நிர்வாகச் சேவைக்கான அனைத்து வசதிகளும் இந்த கட்டடத்தில் இடம் பெறவுள்ளன.

இந்த மன்றக்கூடம், பாரம்பரியத்தை பாதுகாத்து, நவீன நிர்வாகத்தை வலுப்படுத்தும் விதமாகவும், சென்னை மாநகரின் எதிர்கால மாநகராட்சி நிர்வாகத்திற்கு ஒரு வலுவான அடித்தளம் அமைக்கும் வகையிலும் அமைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், மரு. நா.எழிலன், ஆர்.மூர்த்தி, எபிநேசர், எம்.கே.மோகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், இந்து குழுமத்தின் இயக்குநர் என்.ராம், நக்கீரன் கோபால், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு உள்ளிட்ட நிலைக்குழு தலைவர்கள் மற்றும், மண்டலக்குழு தலைவர்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சௌமியா, பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.















தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (23.12.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், 32.62 கோடி ரூபாய் செலவில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்ட சென்னையின் கலாச்சாரச் சின்னமான விக்டோரியா பொது அரங்கத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, ஆர்.கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், வெற்றிஅழகன், மரு. நா.எழிலன், ஆர்.மூர்த்தி, எபிநேசர், எம்.கே.மோகன், துணை மேயர் மு. மகேஷ்குமார், இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம். நக்கீரன் கோபால், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழு தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.